දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

දුරකථන පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
# District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No.: Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 08.04.2009

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் வடமராட்சியில் சொல்லொணாச் சிறப்புக்களுடனும், வரலாற்று விழுமியங்களுடனும், பெரும் பக்தி நிகழ்வுகளுடனும் சீர்பெற்று நிற்கும் எமது ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் உலாகளாவிய ரீதியில் எம் மக்கள் மத்தியில் உயர்ந்து நிற்கின்றது. ஒரு ஆலயத்திற்கு அணிகலனாய் அமையும் மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட செல்வச் சந்நிதி ஆலயத்தின் மூல மூர்த்தி அன்னதானக் கந்தன் எனும் பெயரால் அன்போடு அழைக்கப்படுகின்றான். தன்னை நாடி வருவோர்க்கெல்லாம் அன்னம் ஊட்டி மகிழும் சந்நிதியான், ஆதரவற்றோர்க்கு, முதியோர்க்கு தன் மடங்களில் இடமளித்து "சந்நிதியான் மடமிருக்கு" என்று நம்பிக்கையூட்டுகின்றான். நித்திய பூசை, விசேட பூசை, மஹோற்சவங்கள் எல்லாவற்றிலும் சிறந்து நிற்கும் சந்நிதியான் மகேஸ்வர பூசையால் மகோன்னதம் அடைந்துள்ளான். தென்னிலங்கை கதிர்காமக் கந்தனுடன் வரலாற்று ரீதியாகவும், வழிபாட்டு முறைகளாலும் நெருங்கிய தொடர்புடைய வட இலங்கை சந்நிதியான் பெருமை அளவிட முடியாததாகும். சீர்மிகு சந்நிதியானின் சிறப்பை இணைய தளத்தில் காணும் பேறு இணையற்றதாம். விஞ்ஞானத்தின் துணையோடு மெஞ்ஞானத்தை வளர்க்கும் இம் முயற்சி கந்தன் அடியார்க்குக் கிடைத்த பெரும் பேறாகும். ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய நிர்வாகத்தினர் எம்பெருமானின் பெருமைகளை இணைய தளத்தில் இணைக்கும் இம் முயற்சியால் உலகெங்கணும் உள்ள அவனடியார்களுக்கு அவன்தாள் வணங்கி அருள் பெறும் அரிய வாய்ப்பை வழங்குகின்றனர். கந்தன் பெருமை சொல்லும் இவ் இணைய தளத்தின் செயற்பாடுகள் சிறந்து, நீடித்து, நிலைத்து பயன்தர அவனருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணம்.